Tamil Poetry - Honourable Mention

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

# ஏக்கம் (Longing) and other poems

## ஏக்கம்

துணி விற்கும் கடையொன்றில்

பணி செய்யும் மாதொருத்தி

வகைக்கு ஒன்றாய்

வண்ணங்களுக்கு ஒன்றாய்

விரித்துப் போடுகின்றாள்

விலை உயர்ந்த

புடவைகளை.

தன் ஏக்கங்களைப்

பத்திரமாய்

மடித்து வைத்தபடி!

Tamil Poetry - Honourable Mention

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

ஏக்கம் (Longing) and other poems

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

ஏக்கம் (Longing) and other poems

விதிவிலக்கு

சிந்திய வண்ணங்களைத்

துடைத்ததில் உருவான

நவீன ஓவியங்கள்.

அழகானப் புத்தகங்கள்

அணிவகுத்து நிற்கும்

யாரும் அண்டாத அலமாரிகள்.

வளராது வாடாது

வாழ்நாளைக் கழிக்கும்

வாசமில்லாச் செடிகள்.

பேசாத மனிதர்களோடு

பேசும் பொம்மைகள்.

புத்தம் புதிய பொருட்கள்

பூத்துக் குலுங்கும்

இன்றைய வீடுகளில்

விதிவிலக்காய் இன்னும்

தொங்கிக் கொண்டிருக்கின்றன

மரபுகள்

செயற்கை மாவிலைகளாக.

பிரிவினைவாதி

பல்வேறு மனிதர்கள்

எத்தனையோ சுமைகள்.

பல்வேறு திருப்பங்கள்

எத்தனையோ தடைகள்.

பறக்கும் உலகில்

பரபரக்கும் வாழ்க்கை.

தோல்விகள் ஆயிரம்

தொடர்ந்து வந்தாலும்

விடாது தொடர்கிறது

உயிர்களைக் காக்கும்

பிரிவினைவாதியின்

வாழ்க்கைப் போராட்டம்.

சாலை நடுவே

வெள்ளைக் கோடு !

Tamil Poetry - Honourable Mention

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

ஏக்கம் (Longing) and other poems

பிரிவு

சறுக்கு மேடைகளின்

சந்தோசச் சத்தங்கள்.

சாய்வுநாற்காலியில் வழிந்த

சீனத்துப்பாட்டியின் சிந்தனைகள்.

இடைவெளியற்ற விரல்களும்

உரசிக்கொண்டே தோள்களும்

பேசிச்செல்லும் சல்லாபங்கள்.

கட்டுப்பாடான உடலுக்குக்

கணக்குப் பார்க்கும்

கால் தடங்கள்.

தொலைவிலுள்ள உறவுகளை

துரத்தியலையும் தொலைபேசிகள்.

மழலைகளோடு மல்லுக்கட்டி

மன்றாடும் சோற்றுப் பருக்கைகள்.

பிரிவு நிரந்தரமில்லை எனத்தெரிந்தும்

பித்துப்பிடித்துக் காத்திருக்கின்றன

பூங்காக்கள் நடுராத்திரியில் !

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

ஏக்கம் (Longing) and other poems

### மன்னிப்பு

அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்கள்

ஆதாரத்துடன் இருந்தாலும்

வாதத்திறமையால் வழக்கறிஞர்கள்

வாகை சூடினாலும்

சாட்சி சொல்லச் சம்மதித்து

சாமியே வந்தாலும்

தண்டனைகள் தருவதற்குத்

தகுதிகளாயிரம் இருந்தும்

மன்னிப்பை மட்டுமே

தீர்ப்பெழுதும் ஒரே நீதிபதி

அம்மா !

Tamil Poetry - Honourable Mention

தாயுமானவன் மதிக்குமார் (Thayumanavan Mathikumar)

ஏக்கம் (Longing) and other poems

## தொற்று நோய்

தொட்டுப் பார்த்தாள்.

துடைத்தும் பார்த்தாள்.

கன்னத்தோடு கன்னம் வைத்து

உரசியும் பார்த்தாள்.

பரவவில்லை தொற்று நோய்.

பரவியது அன்னைத் தெரசாவின்

அன்புக் கருணை.